<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,</u>
<u>விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்</u>

MCOP No:73/2023 நாள் 24.10.2024.

2ம் எதிர்மனுதாரா் தரப்பு சாட்சியாகிய எம.சா.2 ன் வாக்குமூலம். 1969ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது பிரிவு 6வது ஏற்பாட்டின்படி திருமதி.சாரதிதேவி, கிரேடு-2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோகுல் | ஜாதி | |
| த-பெ | ஜெகநாதன் | சமயம் | இந்து |
| கிராமம் | மதுரை | தொழில் | பில்லிங் எக்ஸ்க்யூட்டிவ் |
| தாலுகா | மதுரை | வயது | 31 |

முதல் விசாரணை

நான் நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணையை பெற்று மருத்துவமனை நிர்வாகம் கொடுத்த அனுமதியின் பெயரில் அதில் கோரப்பட்டுள்ள ஆணங்களுடன் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அனுமதி கடிதம் எமசாஆ 1.

ஏனோஸ் ராபின் ஞானதாஸ் என்பவர் சாலை விபத்தில் ஏற்பட்ட காயங்களுக்கு சிகிச்சை பெறுவதற்காக எங்கள் மருத்துவமனையில் 12.10.2022 அன்று உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்கு பின்பு 19.10.2022 அன்று விடுவிக்கப்பட்டார். மேற்படி காலகட்டத்தில் அவருக்கு உள்நோயாளியாக அளிக்கப்பட்ட சிகிச்சை கட்டணமாக ரூ.2,21,570/- ரூபாய் நிர்ணயம் செய்யப்பட்டது. அதில் Mediassist காப்பீடு நிறுவனத்தால் ரூ.61,078/- செலுத்தப்பட்டது. மீதி மருத்துவ கட்டணமான ரூ.1,60,492/- மனுதாரரால் செலுத்தப்பட்டது. 12.10.2022 முதல் 19.10.2022 வரை உள்நோயாளியாக சிகிச்சை அளிக்கப்பட்டதற்கான இறுதி மருத்துவ பில் டூப்ளிகேட் காபி எமசாஆ 2.

அவர் மீண்டும் இரண்டாவது முறையாக 20.10.2022 அன்று உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்கு பின்பு 22.10.2022 அன்று விடுவிக்கப்பட்டார். மேற்படி காலகட்டத்தில் அவருக்கு உள்நோயாளியாக அளிக்கப்பட்ட சிகிச்சை கட்டணமாக ரூ.10,650/- ரூபாய் நிர்ணயம் செய்யப்பட்டது. மேற்படி முழுத்தொகையும் மனுதாரர் பணமாக செலுத்தியுள்ளார். 20.10.2022 முதல் 22.10.2022 வரை உள்நோயாளியாக சிகிச்சை அளிக்கப்பட்டதற்கான இறுதி மருத்துவ பில் டூப்ளிகேட் காபி எமசாஆ 3. எமசாஆ 3 யின் பார்மஸியின் மருந்துகள் பெற்றதற்கான தொகை சேர்க்கப்படவில்லை. அது மனுதாரரால் அவ்வப்போது செலுத்தப்பட்டுள்ளது.

மனுதாரர் 3வது முறையாக 21.11.2022 அன்று உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்கு பின்பு 24.11.2022 அன்று விடுவிக்கப்பட்டார். மேற்படி காலகட்டத்தில் அவருக்கு உள்நோயாளியாக அளிக்கப்பட்ட சிகிச்சை கட்டணமாக ரூ.47,796/- ரூபாய் நிர்ணயம் செய்யப்பட்டது. அதில் Mediassist காப்பீடு நிறுவனத்தால் ரூ.21,840/- செலுத்தப்பட்டது. மீதி மருத்துவ கட்டணமான ரூ.25,950/- மனுதாரரால் செலுத்தப்பட்டது. 21.11.2022 முதல் 24.11.2022 வரை உள்நோயாளியாக சிகிச்சை அளிக்கப்பட்டதற்கான இறுதி மருத்துவ

பில் டூப்ளிகேட் காபி எமசாஆ 4. எமசாஆ 4 ல் பார்மஸியின் மருந்துகள் பெற்றதற்கான தொகை சேர்க்கப்பட்டுள்ளது.

அவர் மீண்டும் நான்காவது முறையாக 25.02.2023 அன்று உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்கு பின்பு 26.02.2023 அன்று விடுவிக்கப்பட்டார். மேற்படி காலகட்டத்தில் அவருக்கு உள்நோயாளியாக அளிக்கப்பட்ட சிகிச்சை கட்டணமாக ரூ.11,100/– ரூபாய் நிர்ணயம் செய்யப்பட்டது. மேற்படி முழுத்தொகையும் மனுதாரர் பணமாக செலுத்தியுள்ளார். 25.02.2023 முதல் 26.02.2023 வரை உள்நோயாளியாக சிகிச்சை அளிக்கப்பட்டதற்கான இறுதி மருத்துவ பில் டூபளிகேட் காபி எமசாஆ 5. எமசாஆ 5 யின் பார்மஸியின் மருந்துகள் பெற்றதற்கான தொகை சேர்க்கப்படவில்லை. அது மனுதாரரால் அவ்வப்போது செலுத்தப்பட்டுள்ளது.

மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

மனுதாரர் அரசு ஊழியர் என்றால் அது பற்றி எனக்கு தொியாது. எமசாஆ 2 மற்றும் 4 ல் தமிழ்நாடு அரசால் அங்கீகாிக்கப்பட்ட காப்பீடு திட்டத்திற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி திட்டத்தின் கீழ் யூனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி அங்கீகாிக்கப்பட்ட காப்பீடு நிறுவனம் என்றால் சரிதான். அரசு ஊழியரின் சம்பளத்தில் காப்பீடு செய்வதற்காக பிடித்தம் செய்யப்பட்ட தொகையில்தான் காப்பீடு தொகையாக செலுத்தப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தொியாது. மேற்படி பில்லை தயார் செய்தவர்களை விசாரித்தால் மேற்படி விபரம் தொியவரும் என்றால் மருத்துவமனையில் பில் தயாரிக்கப்பட்டு அசல் பில் காப்பீடு நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டு அவர்கள் ஒப்புதல் அளித்த தொகை காப்பீடு நிறுவனத்தால் செலுத்தப்படும். காப்பீடு சம்பந்தப்பட்ட பில்களை கையாள்வதற்கு தனிப்பிரிவு உள்ளது என்றால் சரிதான். அது சம்பந்தப்பட்ட பிரிவு ஊழியர்களை விசாரித்தால் எந்தெந்த காப்பீடு நிறுவனத்தில் எதன் அடிப்படையில் எவ்வளவு தொகை பிடித்தம் செய்யப்பட்டது என்பது தொியவரும் என்றால் சரிதான். எமசாஆ 2 முதல் எமசாஆ 5 ஆவணங்கள் பற்றி எனக்கு முழுமையாக தொியாது என்றால் சரியல்ல. 2 ம் எதிர்மனுதாரரால் எமசாஆ 2 முதல் எமசாஆ 5 உள்ள தொகை செலுத்தப்படவில்லை என்றால் சரிதான்.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 24th day of October 2024.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,
Virudhunagar District at
Srivilliputtur.**